## இலங்கை தென்பகுதி அபிவிருத்தி அதிகாரசபை 2010

-----------------------------------------------------------------------------------------

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1. அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்களின் காரணமாக கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இலங்கை தென்பகுதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் தெரிவிக்க முடியாதுள்ளேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு கொள்கை

பின்வரும் கணக்கீட்டு கொள்கை கடைப்பிடிக்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 42 இன் பிரகாரம் பணிக்கொடை நிதியினை முதலீடு செய்தல், முதலீட்டு நலன்களை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துதல், மற்றும் பணிக்கொடைக் கொடுப்பனவுகளுக்காக ஏற்படும் எதிர்கால பொறுப்புக்களைத் தீர்த்துவைப்பதற்கு நிதியம் ஒன்று உருவாக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. திறைசேரியிலிருந்து நிதி ஏற்பாடுகள் கிடைக்காமையினால் நிதியம் ஒன்றினை உருவாக்க முடியாதிருந்தது என தலைவர் தெரிவித்துள்ளார்.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடு

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

அக்மீமனை பிரதேச செயலகத்தின் அறிக்கையின் பிரகாரம் கந்துருந்துவத்த காணிக்காக இழப்பீடு செலுத்தும் போது செலுத்த வேண்டிய ரூபா 6,017,072 தொகையான வட்டி மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

பின்வரும் விடயங்களின் கீழுள்ள கணக்குகளுக்குரிய பட்டோலைகள் மற்றும் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 43,332,302 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| கணக்கு | பட்டோலையின் பிரகாரம் பெறுமதி | இறுதி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| ஜாதிக சவிய கமநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் செலவுகள் | 204,542,752 | 247,360,548 | 42,817,786 |
| நிலையான சொத்துக்கள் | 47,752,850 | 48,267,366 | 514,516 |
| | 252,295,602 | 295,627,914 | 43,332,312 |

### 1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல ஆண்டுகளாக முன்கொண்டுவரப்பட்டுக் காணப்படுகின்ற ரூபா 3,281,827 தொகையான முற்பணங்கள் மீளாய்வாண்டு இறுதிவரையும் தீர்த்துவைக்கப்படாதிருந்ததுடன் இத்தொகையில் 1999 ஆம் ஆண்டிற்கு முன்னர் வழங்கப்பட்ட ரூபா 851,039 தொகை இனங்காணப்படாத மீதியாகவும் இருந்தது. இது தொடர்பாக கடந்த ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் காட்டப்பட்டிருந்தும் தீர்த்துவைத்தல் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஆ) துறைரீதியான முற்பணமாக 1999 ஆம் ஆண்டிலிருந்து 2001 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியின் போது வழங்கப்பட்ட ரூபா 2,522,078 தொகை மீளாய்வாண்டின் போதும் தீர்த்துவைக்கப்படாது முன்கொண்டு வரப்பட்டிருந்தது. மேலும் முன்னைய ஆண்டுகளுக்கான எனது

அறிக்கைகளிலும் இது தொடர்பாகக் காட்டப்பட்டிருந்தும் தீர்த்துவைத்தல்கள் இடம்பெறவில்லை.

(இ) வாடகை முற்பணங்களாகக் செலுத்தப்பட்ட ரூபா 297,000 தீர்த்துவைக்கப்படாது 2004 ஆம் ஆண்டிலிருந்து இனங்காணப்படாத மீதியாக முன்கொண்டுவரப்பட்டிருந்தது. மேலும் 2000 ஆம் ஆண்டின் போது அம்பாந்தோட்டை மாவட்ட வர்த்தக சபைக் கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 1,000,000 முற்பணம் மீளாய்வாண்டின் போதும் தீர்த்துவைக்கப்படவில்லை.

(ஈ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வெங்காயச் செய்கைக்காக 1998 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 702,833 தொகையானது கடன் தொகை அன்றி மானியம் என கடந்த அறிக்கைக்கான பதிலில் காட்டப்பட்டிருந்தும் மீளர்யவாண்டின் போது அத்தொகை பெறவேண்டிய மீதி ஒன்றாக இறுதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(உ) காணிகளைச் சுவீகரித்தல் நடவடிக்கைகளுக்காக சில ஆண்டுகளாக பிரதேச செயலகத்திற்கான வைப்பாகச் செலுத்தப்பட்ட ரூபா 3,712,125 தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்த்துவைக்கப்படுவதற்கோ அல்லது அக்காணிகளை எதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்கோ அதிகாரசபை முயற்சி எடுத்திருக்கவில்லை.

(ஊ) பல ஆண்டுகளாக செலுத்தவேண்டிய பணமாக நிதிக்கூற்றக்களில் காட்டப்பட்டுவரும் ரூபா 155,853 தொகையான கடன் மீதி மீளாய்வாண்டின் போதும் தீர்த்துவைக்கப்படவில்லை.

(எ) மாத்தறை மாவட்ட அலுவலகம் தொடர்பாக 2004 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளின் போது செலுத்தப்படவேண்டிய நீர், மின்சாரம் மற்றும் வாடகைக் கட்டணம் என்பவற்றுக்கான ரூபா 315,663 தொகையான செலவு ருகுணு 2001 வென்சர் கெப்பிடல் கம்பனி மூலம் இடம்பெற்றிருந்தது. அந்த செலுத்தவேண்டிய பணம் உரிய கம்பனிகளின் ரூபா 43,888,183 தொகையான முதலீடுகள் தொடர்பாகக் கிடைக்கவேண்டிய பங்கிலாபங்களிலிருந்து தீர்க்கப்பட்டதாக 2010 மே 18 ஆந் திகதிய கடிதத்தில் உரிய கம்பனிக்கு தெரியப்படுத்தியிருந்தும் அது

இடம் பெறாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் போதும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) அதிகாரசபையினால் பல ஆண்டுகளுக்கு முன்னர் வழங்கப்பட்ட ரூபா 2,108,204 தொகையான கடன் மற்றும் முற்பணங்களை மீள அறவீடு செய்வதற்கு 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) பல்வேறு செயற்திட்டங்களுக்காக பல்வேறு நிறுவனங்களுக்கும் நபர்களுக்கும் செலுத்தப்பட்ட ரூபா 1,326,151 தொகையினை 2011 மார்ச் 31 ஆந் திகதிவரையும் மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3 கணக்காய்விற்காக சான்றுகள் இல்லாமை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பின்வரும் விடயங்களுக்கு முன்னால் உள்ள சான்றுகள் இல்லாமையின் காரணமாக அவ்விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதி/ மெய்மையாய்வு செய்வதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

| கணக்கு விடயம் | பெறுமதி | சமர்பபிக்கப்படாத சான்று |
|---|---|---|
| வியாபார மற்றும் ஏனைய கடன்பட்டோர் | 33,779,137 | மீதிகளை உறுதிப்படுத்தல், காலப்பகுப்பாய்வு, உரிய கோவைகள் என்பன |
| காணிச்சுவீகரிப்பு வைப்புக்கள் | 13,602,115 | மீதிகளை உறுதிப்படுத்தல் கடிதம் |
| செலுத்த வேண்டிய பணம் | 26,493,104 | - மேற்படி - |
| செலுத்த வேண்டிய மூலதனச் செலவு சமூக நலன்புரி | 7,512,207 | உரிய உத்தியோகத்தர்களினால் வேலையினை மேற்கொண்டமைக்கான சான்றிதழ், அங்கீகரிக்கப்பட்ட பட்டியல்கள், கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் என்பன. |
| செலுத்த வேண்டிய மூலதனச் செலவு விசேட செயற்திட்டம் | 16,866,615 | - மேற்படி - |

## 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணைக் கட்டளைச் சட்டம் மற்றும் அரசாங்க நிதிப் பிரமாணம் 880 | கட்டளைச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் மற்றும் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் காசு, களஞ்சியம் மற்றும் சொத்துக்களுக்குப் பொறுப்பாகச் செயற்படும் உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைமுறிகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையின் பணம், களஞ்சியம், பொருட்கள், சொத்துக்கள் என்பவற்றிற்கு பொறுப்பாகச் செயற்படுகின்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அவ்வாறான பிணைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிக்கவில்லை. |
| (ஆ) இலங்கை அரசாங்கத்தின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நி.பி 371 | முற்பணங்கள் உரிய செயற்பாடு பூர்த்தியடைந்த உடன் தீர்த்துவைக்கப்படவேண்டிய போதிலும் 1999 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு இறுதிவரை செலுத்தப்பட்ட ரூபா 6,234,394 தொகையான முற்பணங்கள் 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி 571 | காலங்கடந்த மற்றும் உரிமை கோரப்படாத வைப்புக்கள் நிதிப் |

பிரமாணங்களின் பிரகாரம் பரிசோதனை செய்துபார்த்து வருமானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் வைப்பு பேரேட்டின் பிரகாரம் ரூபா 481,488 தொகையான உரிமை கோரப்படாத காலங்கடந்த வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2000 யூன் 12 ஆந் திகதிய ஐஏஐ/2000/1 ஆம் இலக்க திறைசேரி செயலாளரின் சுற்றுநிருபத்தின் 01 ஆம் பந்தி

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டங்கள் காலண்டுக்கு ஒரு முறை கூட்டப்படவேண்டிய போதிலும் 2010 ஆம் ஆண்டில் மூன்று தடவைகள் மாத்திரமே கூட்டப்பட்டிருந்தன. அவ்வாறே 2000 மார்ச் 15 ஆந் திகதிய PF/PE/7 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் உரிய அமைச்சிலிருந்து ஆகக் குறைந்தது பணிப்பாளர் சபையின் மூன்று உறுப்பினர்கள் குழுவில் பங்குபற்ற வேண்டிய போதிலும் இரண்டு பேர் மாத்திரமே பங்குபற்றி இருந்தார்கள். 2010 செப்தெம்பர் மாதத்தின் திகதியிடப்படாத கடிதத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினை பிரதி நிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டிருந்தும் அந்த உத்தியோகத்தர்கள் குழுக்கூட்டங்களில் பங்குபற்றியிருக்கவில்லை.

(ஈ) பணிப்பாளர் சபைத் தீர்மானங்கள்

2008 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டின் ஏப்ரல் வரையான காலப்பகுதியின் போது பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக அவதானிக்கப்பட்ட

விடயங்கள் வருமாறு.

| | | |
|---|---|---|
| (i) | 2008/10/04<br>கிரிகொவி விவசாயிகள் கிராம நிகழ்ச்சித்திட்டம்<br><br>2008/11/02<br>அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் செயல் முன்னேற்றம்<br><br>2009/01/01 – XIV<br>கரந்தெனிய ரீ.டீ.சமரவீர விளையாட்டரங்கில் நீர் மற்றும் மின்சார முறைமையினை மேம்படுத்துதல்<br><br>2009.05.01 – v<br>2009 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம்<br><br>2010.02.01 – கந்துருவத்த காணி | பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் மூலம் செயற்திட்டம் வெற்றியளிக்காமை தொடர்பாக பொறுப்பான உத்தியோகத்தர்களிடம் சுதந்திரமாக விடயங்கள் விசாரிக்கப்பட வேண்டுமெனவும் பொருத்தமான ஒழுக்காற்று நடைமுறைகள் எடுக்கப்படவேண்டுமெனவும் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை அமுல்ப்படுத்துவதில் தாமதம் ஏற்படல். |
| (ii) | 2009/05/01 – vi<br>கிரல கெலே செயற்திட்டம் | பணிப்பாளர் சபை தீர்மானத்தின் மூலம் மீளாய்வு உத்தியோகத்தர்கள் குழு ஒன்றினை நியமிப்பதற்கு ஆலோசனை தெரிவிக்கப்பட்டிருந்தும் அத்தீர்மானம் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| 2009/05/04 – அங்கீகரிப்பதற்கு உரிய பதிவேடு பூரணமின்மை மற்றும் செயற்திட்டங்களை நாளதுவரையாக்கல் எனக் குறிப்பிட்டு கொடுப்பனவு செய்தல். | |
| 2009/06/01 – vii துறைரீதியான செயல்முன்னேற்றம் 2006 இலிருந்து 2008 வரை | பணிப்பாளர் சபை தீர்மானத்தினை அமுல்ப்படுத்துதல் தொடர்பாக பணிப்பாளரின் (நிதியும் நிர்வாகமும்) 2010 செப்தெம்பர் 01 ஆந் திகதிய மற்றும் 2011 பெப்ரவரி 02 ஆந் திகதிய கடிதங்களின் மூலம் அனைத்து பணிப்பாளர்கள் மற்றும் பிரிவுத் தலைவர்களுக்கு விலாசமிடப்பட்டு பணிப்பாளர்கள் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றுமாறு தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுப் பரிசோதனைச் சந்தர்ப்பம் வரையும் மேலே குறிப்பிடப்பட்ட தீர்மானத்தினை அமுல்ப்படுத்துதல் இடம்பெற்றிருக்கவில்லை.<br><br>2010 ஆம் ஆண்டில் 07 தடவைகள் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடைபெற்றிருந்ததுடன் அந்த 07 தடவைகளிலும் தலைவருக்கு மேலதிகமாக ஒரு அங்கத்தவர் மாத்திரமே பங்குபற்றியிருந்தார். பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் எண்ணிக்கை 07 ஆகும். |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------------------------------

### 2.1 நிதிசார் மீளாய்வு

-----------------------------

மீளாய்வாண்டின் போது அதிகாரசபையின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 8,672,824 பற்றாக்குறையாக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் அதற்கு எதிராக ரூபா 112,688 மிகையாக இருந்தமை மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 8,785,512 ஆல் வீழ்ச்சியடைந்திருந்தது. இதற்கு முன்னைய ஆண்டினைவிட மீளாய்வாண்டில் புனரமைப்பு உதவி மற்றும் ஏனைய வருமானங்கள் ரூபா 1,699,233 ஆல் குறைவடைந்திருந்தமை, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 7,086,279 ஆல் அதிகரித்திருந்தமை, புனரமைப்பு மற்றும் ஏனைய வருமானங்கள் ரூபா 1,699,233 ஆல் குறைவடைந்தமை நிதிசார் விளைவுகளின் வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தன.

### 2.2 ஒப்பந்த நிர்வாகம்

-------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) அம்பலாங்கொடை பிரதேச செயலாளர் அதிகாரப் பிரதேசத்தில் படபொல அறிஞர் நிலையத்தின் மிகுதி வேலையினைப் பூர்த்திசெய்தல்.**

-------------------------------------------------------------------------------------------------------------------------

இந்த வேலைகளுக்காக 05 விடயங்களின் கீழ் ரூபா 1,739,717 தொகையான மதிப்பீடு ஒன்று சிபார்சு செய்யப்பட்டிருந்ததுடன் நிர்மாண வேலைகளுக்காக படபொல மேற்கு இலுக்பிடிய கிராம அபிவிருத்திச் சங்கத்துடன் 2009 ஏப்ரல் 27 ஆந் திகதி ரூபா 1,674,198 பெறுமதியான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ரூபா 1,557,337 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2009 யூலை 26 ஆந் திகதி வேலைகள் பூர்த்திசெய்யப்பட்ட இந்த அறிஞர் நிலையம் $1^1/_2$ ஆண்டு காலமாக திறந்துவைக்கப்படாது காணப்பட்டமை 2011 சனவரி 24 ஆந் திகதிய களப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

**(ஆ) கொகிலவகுர கிரிகம்மான நிகழ்ச்சித்திட்டம் - கரந்தெனிய மதகு நிர்மாணித்தல்**

---

மேலே குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் மதகுகளை நிர்மாணிப்பது தொடர்பாக அதிகாரசபையின் காலி மாவட்ட அலுவலகத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் 18 விடயங்களைக் கொண்ட ரூபா 1,693,929 பெறுமதியான மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டு 2009 நவம்பர் 27 ஆந் திகதி தெற்கு மாகல கிராம அபிவிருத்திச் சங்கத்துடன் ரூபா 1,620,280 பெறுமதியான உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடப்பட்டு ரூபா 722,971 செலுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) வீதி முறைமை தொடர்பாக நிர்ாமாணிக்கப்பட்ட மதகு, 2011 சனவரி 20 ஆந் திகதிய களப்பரிசோதனையில் பராமரிக்கப்படாமையின் விளைவாக புதர்கள் முளைத்து மூடப்பட்டு நீர் வழிந்தோடாத நிலையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ii) 2011 சனவரி 20 ஆந் திகதிய களப் பரிசோதனையில் இந்த கிரிகம்மான செயற்திட்டம் வெற்றியளிக்காத செயற்திட்டமாகக் காணப்படதுடன் உரிய நிலம் இலங்கை இராணுவத்திற்கு ஒப்படைக்கப்பட்டதனால் இந்த வேலையின் கீழ் செலவு செய்யப்பட்ட ரூபா 722,971 செலவு விளைவற்றதாகக் காணப்பட்டது.

**(இ) புனித திரேஸா கனிஸ்ட வித்தியாலயம், புனித திரேஸா பெண்கள் மகாவித்தியாலயம், புனித மேரி மகா வித்தியாலயம் என்பவைகளுக்குச் சொந்தமான விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்தல்.**

---

தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்புதல் அமைச்சின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்ற ஜாதிக சவிய கமநெகும செயற்திட்ட நிதி ஏற்பாட்டின் மூலம் மண் வெட்டப்பட்டு விளையாட்டு மைதானங்களை விரிவாக்குவதற்கும் மதில் சுவர்களை நிர்மாணிப்பதற்கும் முறையே ரூபா 1,590,440 மற்றும் ரூபா 1,553,662 மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு மண்வெட்டி வியைாட்டு மைதானங்களை

விரிவாக்குவதற்கு 2008 ஆகஸ்ட் 25 ஆந் திகதி கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்றுடன் ரூபா 1,590,440 தொகையான உடன்படிக்கையும் மதில் சுவர்களை நிர்ாமணிப்பதற்கு 2008 ஆகஸ்ட் 22 ஆந் திகதி இன்னுமொரு கிராம அபிவிருத்திச் சங்கத்துடன் ரூபா 1,553,662 தொகையான உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டு ரூபா 2,947,775 செலுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பாக 2011 சனவரி 20 ஆந் திகதிய வெளிக்களப் பரிசோதனையில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) விளையாட்டு மைதானத்தில் மண் வெட்டி அகற்றுவதற்காக வழங்கப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் அகற்றப்பட்ட 1440 கியூப் மண்ணுக்கு ரூபா 1,590,440 தொகையும் பயன்படுத்தப்பட்ட 120 இயந்திர மணித்தியாலங்ள் தொடர்பாக ரூபா 225,960 தொகையும் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அளவை விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இந்த வேலையிலிருந்து மூன்று பாடசாலை மாணவர்களின் தேவைப்பாடுகள் தொடர்பாகக் காணப்பட்ட விளையாட்டு மைதானங்களை விரிவாக்குவதாக இருந்த போதிலும் மூன்று பாடசாலைகளினதும் அதிபர்களின் 2011 சனவரி 20 ஆந் திகதிய எழுத்துமூல வெளிப்படுத்துகையின் பிரகாரம் நிர்மாணிக்கப்பட்ட விளையாட்டு மைதானங்களின் நிலைமை வெற்றியளிக்காமையும் நிர்ாமணிக்கப்பட்டதன் பின்னர் ஏற்கனவே காணப்பட்ட சிறிய பகுதியையும் பயன்படுத்த முடியாத நிலைக்கு உள்ளாகி இருப்பதாகவும் வெளிப்படுத்தப்பட்டது. இதன் பிரகாரம் இந்த வேலைகளுக்காகச் செய்யப்பட்ட ரூபா 2,947,775 தொகையான செலவுகள் விளைவற்றதாகக் காணப்பட்டது.

(iii) இந்த நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொண்ட சங்கம் கணக்காய்விற்குச் செய்த எழுத்துமூல வெளிப்படுத்தலின் பிரகாரம் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்ட இரண்டு சங்கங்களும் இந்த நிர்மாண வேலைகளை மேற்கொண்டிருக்காததுடன் சங்கத்தின் பெயரில் எழுதப்பட்ட காசோலைகளை மாற்றி பணத்தினை உப ஒப்பந்தக்காரருக்கு

வழங்குவதனை மாத்திரம் மேற்கொண்டதாக வெளிப்படுத்தியிருந்தது.

(iv) தேசத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் தோட்ட உட்டகட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு செயலாளரின் சுற்றுநிருபம்/ கமநெகும/03/2008 ஆம் இலக்க 2008 ஏப்ரல் 29 ஆந் திகதிய சுற்றுநிருபத்தின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் அளவீட்டுப் பத்திரமுறைமைக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியதுடன் மதிப்பீட்டுப் பெறுமதியில் ஆகக் குறைந்தது 20% சமூகப் பங்களிப்பிற்காக குறைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாது மொத்த மதிப்பீட்டுப் பெறுமதிக்கும் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்ததனால் மேலதிகமாகச் செலுத்தப்பட்ட தொகை ரூபா 432,493 ஆகும்.

(v) நிர்மாணிக்கப்படும் காணியில் நிலக் குறைபாடுகளை ஆய்வு செய்து நிர்மாணங்கள் திட்டமிடப்பட வேண்டிய போதிலும் மதிப்பீடுகளில் அதற்காக நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் இந்த விளையாட்டு மைதானத்தினை விரிவாக்கல் செய்யாது மண்வெட்டி அகற்றுதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தமை 2011 சனவரி 20 ஆந் திகதிய வெளிக்களப் பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது.

**2.3 செயலாற்றல்**

---------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**2.3.1 ஜாதிக சவிய கமநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் விவசாயிகளுக்கு வெற்றுக் கன்றுகள் வழங்குதல்.**

---------------------------------------------------------------------------------------------------------------------------

மேற்குறித்த விடயம் தொடர்பாக மொனறாகலை மாவட்டத்தின் வெள்ளவாய மற்றும் படல்கும்புற பிரதேச செயலாளர் அதிகாரப் பிரதேசத்திற்குரிய சியம்பலாகுணய, மயிலகஸ்தென்ன, பல்லேகம ஆகிய கிராமங்களில் மேற்கூறிய திணைக்களத்திற்குச் சொந்தமான இறப்பர் பயிர்ச்செய்கை விவசாயிகளுக்கு மத்தியில் ரூபா 408,000 பெறுமதியான 8160 இறப்பர் கன்றுகள் கொள்வனவு செய்யப்பட்டு பகிர்ந்தளிப்பதற்கும் அது தொடர்பான

பகிர்ந்தளித்தல் பட்டியல், பின்தொடர் நடவடிக்கைகள், செயல் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றை தயாரிப்பதற்கும் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மேற்கூறிய விடயங்கள் தொடர்பான செயல்முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றை தயாரிப்பதற்கும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மேற்கூறிய விடயங்கள் தொடர்பான செயல்முன்னேற்றம் கீழே தரப்படுகின்றன.

(அ) மொனறாகலை மாவட்ட முகாமைத்துவ பிரதான அலுவலகத்தில் பிரிவு முகாமையாளரின் (தோட்டம்) அங்கீகாரத்தின் கீழ் 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 403,000 செலுத்தப்பட்டு 8160 இறப்பர் கன்றுகள் பெற்றுக்கொள்ளப்பட்டு விவசாயிகளுக்கு மத்தியில் பகிர்ந்தளிக்காதிருந்த போதிலும் ஒவ்வொரு விவசாயிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்ட கன்றுகளின் எண்ணிக்கை, பெற்றுக்கொண்டமைக்காக கையெழுத்துடனான பகிர்ந்தளித்தல் பட்டியல், பகிர்ந்தளிக்கப்பட்ட கன்றுகள் பயிரிடப்பட்டதா என்பது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள், செயல்முன்னேற்றம் தொடர்பான அறிக்கை என்பன தயாரிக்கப்பட்டிருக்காததனால் நிகழ்ச்சித்திட்டத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பாக மதிப்பீடு செய்யமுடியாதிருந்தது.

(ஆ) தேசத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு செயலாளரின் 2008 மார்ச் 08 ஆந் திகதிய கமநெகும/1/2008 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் மேலே குறிப்பிட்டவாறு தனிப்பட்ட படியாக இறப்பர் கன்றுகள் கொள்வனவு செய்யப்பட்டு பகிர்ந்தளித்தலுக்காக நிதி ஏற்பாடு இல்லாதிருந்த போதிலும் அதனை கவனத்தில் கொள்ளாது ஜாதிக சவிய கமநெகும அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய ரூபா 403,000 பணம் மேற்கூறிய தனிப்பட்ட படியாக விவசாயிகளுக்கு மத்தியில் செலுத்தப்பட்டிருந்துது.

**2.3.2 கொஹிலவகுற, கிரிகொவி கிராமத்தில் 3 ஏக்கர்களுக்கு நீர் வழங்கல் செயற்திட்டம்**

---

(அ) மேற்கூறிய விடயம் தொடர்பாக அதிகாரசபையின் காலி மாவட்ட அலுவலகத்தின் மூலம் ரூபா 246,248 மதிப்பீட்டில் 11 விடயங்களுடனான 15 அடி ஆழமும் 3 அடி அகலமும் கொண்ட கிணறு ஒன்றினை நிர்மாணித்து தண்ணீர் மோட்டார் ஒன்றினை வழங்கி பொருத்தி கொஹில வகுற கிரிகொவி கிராமத்தில் 3 ஏக்கர்களுக்கு நீர் வழங்குவதற்கு இலக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) இச்செயற்திட்டத்திற்காக கரந்தெனிய பிரதேசத்தில் சமூர்த்திச் சங்கம் ஒன்றுடன் 2009 பெப்ரவரி 29 ஆந் திகதி ரூபா 223,861 பெறுமதியான உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டு 07 விடயங்களுக்கு நிறைவேற்றப்பட்ட வேலைகள் தொடர்பாக 2010 ஒக்டோபர் 07 ஆந் திகதி ரூபா 96,527 செலுத்தப்பட்டிருந்தது. விடய இலக்கங்கள் 8,9,10,11 என்பவற்றிற்குரிய PVC குழாய்களும் துணைக்கருவிகளும் வழங்கி பொருத்துதல் இடம்பெற்றிருக்காததுடன் 2011 சனவரி 20 ஆந் திகதிய களப் பரிசோதனைச் சந்தர்ப்பத்தில் கிணற்றினைச் சுற்றி நிர்மாணிக்கப்பட்ட மறைப்புச் சுவர் வெடித்திருத்தல் மற்றும் பக்கச் சுவர் வெடித்து பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாதவாறு புதர் வளர்ந்து காணப்பட்டது.

(இ) (i) மேற்கூறிய செயற்திட்டத்தின் மூலம் இலக்கிடப்பட்ட 3 ஏக்கர்களுக்கு நீர் வழங்குதல் கணக்காய்வுப் பரிசோதனைத் திகதியும் இடம்பெற்றிருக்கவில்லை.

(ii) 15 அடி ஆழத்தில் கிணறு வெட்டுவதற்கு ரூபா 15,000 மதிப்பிடப்பட்டிருந்தும் வெட்டப்பட்ட அளவு 25% எனக் கணித்து ரூபா 3,750 செலுத்தப்பட்டிருந்ததனால் வெட்டுதல் உரிய முறைப்படி இடம்பெற்றிருக்கவில்லை.

(iii) விடய இலக்கம் 07 இன் பிரகாரம் ரூபா 27,000 மதிப்பீட்டுப் பெறுமதியில் 1500 லீற்றர் பிலாஸ்ரிக் கொள்கலன் வழங்கி கொங்கிறீட் மேடை ஒன்று நிர்மாணிக்கப்படவேண்டிய போதிலும்

பிலாஸ்ரிக் நீர் கொள்கலன் வழங்கப்படாது 75% ஆன வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டதாகக் காட்டி ரூபா 20,250 செலுத்தப்பட்டிருந்தது.

(iv) விடய இலக்கம் 06 இன் பிரகாரம் ரூபா 50,400 செலுத்தப்பட்ட தண்ணீர் மோட்டார் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது களஞ்சியத்தில் வைத்திருக்கப்பட்டது.

(v) இச்செயற்திட்டத்திற்குரிய கொகிலவகுர செயற்திட்டம் வெற்றியளிக்காத ஒன்றாக இருந்ததனால் கணக்காய்வுப் பரிசோதனைத் திகதியளவில் கிணறு நிர்ாமணிக்கப்பட்ட காணி இலங்கை இராணுவத்திற்கு ஒப்படைக்கப்பட்டதனால் செலவு செய்யப்பட ரூபா 96,527 தொகை விளைவற்றதாக இருந்தது.

**2.3:3 கொகிலவகுர செயற்திட்டம் - காலி மாவட்டத்தின் கரந்தெனிய தேர்தல் பிரிவு**

---

மாதிரி பால் கிராமம், வர்த்தக தென்னைப் பயிர், வீடமைப்பு அபிவிருத்தி, சுற்றுலா ஆகிய செயற்திட்டங்ளை அமுல்ப்படுத்துவதற்காக 2007 திசெம்பர் 31 ஆந் திகதிய 1530/9 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் 188 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட கொகிலவத்த காணி பொறுப்பேற்கப்பட்டதுடன் காணியின் தொடக்க அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ரூபா 5,627,923 தொகையினை அதிகாரசபை செலவுசெய்திருந்தது.

2005 யூன் 05 ஆந் திகதி சனாதிபதி செயலகத்தில் செயல்முன்னேற்ற மீளாய்வுக் குழுக் கூட்டத்தின் போது ஜாதிக சவிய மற்றும் கமநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையினை இந்த நிகழ்ச்த்திட்டத்திற்கு ஈடுபடுத்துவதில்லை என்று எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானத்தின் அடிப்படையில் செயற்திட்டத்தினை முழுமையாகக் கைவிடுவதுடன் 188 ஏக்கர்கொண்ட மொத்தக் காணியில் 22 ஏக்கர் 03 ரூட் 28 பேச்சஸ் காணியினை அதிகாரசபையின் பொறுப்பில் வைத்துக்கொண்டு மிகுதி காணி இராணுவத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும் அதிகாரசபையினால் செலவுசெய்யப்பட்ட ரூபா 5,627,923 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 ஆலோசனைக் கட்டணம் செலுத்துதல்**

**------------------------------------------------------------**

(அ) இலங்கை தென்பகுதி அபிவிருத்தி அதிகாரசபையில் ஆலோசகர் ஒருவர் சனாதிபதி செயலாளரின் 2005 திசெம்பர் 28 ஆந் திகதிய DMD/5 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் நியமிக்கப்பட்டு பணிப்பாளர் நாயகத்தின் 2006 திசெம்பர் 26 ஆந் திகதிய SDA/05/W/70 ஆம் இலக்க கடிதம் மற்றும் 2011 பெப்ரவரி 08 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அதிகாரசபையில் நிறைவேற்றப்படவேண்டிய ஐந்து கடமைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

(ஆ) இக்கடமைகளை நிறைவேற்றுவது தொடர்பாக 2010 ஆம் ஆண்டின் போது சம்பளம், எரிபொருள், வாகன பழுதுபார்த்தல் தொலைபேசிக் கட்டணம் என்பன தொடர்பாக ரூபா 689,163 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் ஆலோசகருக்கு ஒப்படைக்கப்பட்ட கடமைகள் நிறைவேற்றப்பட்டதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான முறைமை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. நிறைவேற்றப்பட்ட கடமைகள் தொடர்பாக கணக்காய்வில் விசாரணை செய்த போது பதிலாக ‘‘கடமைகள் செயன்முறையாக நிறைவேற்றப்பட்டுவருகின்றன’’ என்று மாத்திரம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(இ) (i) இதற்கிணங்க ஒப்படைக்கப்பட்ட கடமைகள் உரிய முறையில் நிறைவேற்றப்பட்டதா என்பது தெளிவற்றதாக இருந்ததனால் ஆலோசகருக்கு அதிகாரசபை 2010 ஆம் ஆண்டிற்காகச் செலவுசெய்த ரூபா 689,163 தொகைக்கு நிகரான சேவை பெற்றுக்கொள்ளப்பட்டதா என்பதனை மதிப்பீடுசெய்ய முடியாதிருந்தது.

(ii) பிராந்திய அபிவிருத்தி அமைச்சு செயலாளரின் 2006 மார்ச் 28 ஆந் திகதிய MRD/SEC/5 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் மேற்கூறிய ஆலோசகர் அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 25(1) ஆம் பிரிவின் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளதாகக் காட்டப்பட்டிருந்தும் அந்தப் பிரிவில் அதிகாரசபையின் நடவடிக்கைகளை செயற்திறனாக்குவதற்காக பதவியணியினரை நியமித்தல் தொடர்பாவே தெரிவிக்கப்பட்டிருந்தது.

**2.3.5 கந்துருந்துவ தோட்டக் காணி**

(அ) தென் மாகாணத்தின் காலி மாவட்டத்தில் அக்மீமனை பிரதேச செயலகப் பிரிவில் கந்துருந்துவ தோட்டம் எனும் காணி பிராந்திய பொருளாதார அபிவிருத்திக்காக அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் பிரகாரம் பொறுப்பேற்கப்பட்டு அதற்காக இழப்பீடாகவும் வட்டியாகவும் 1998 ஆம் ஆண்டிலிருந்து 2005 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் செலுத்தி பூர்த்திசெய்தலானது ரூபா 17,225,800 செலவில் இலக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) (i) அதிகாரசபையின் மேலதிக பணிப்பாளர் நாயகத்தின் 1998 சனவரி 02 ஆந் திகதிய கடிதம், 1998 செப்தெம்பர் 11 ஆந் திகதிய 1044/31 ஆம் இலக்க வர்ர்தமானி என்பவற்றிற்கு இணங்க காணியினைப் பொறுப்பேற்றல் இடம்பெற்றிராததுடன் 1998 நவம்பர் 06 ஆந் திகதி அக்மீமன பிரதேச செயலாளர் பொறுப்பேற்ற 14 காணித்துண்டுகள் அதிகாரசபையினால் பொறுப்பேற்றல் 2006 மே 28 ஆந் திகதி வரையும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் காணிக்காக ரூபா 10,539,989 தொகையான இழப்பீட்டுப் பணம் 1998 ஆகஸ்ட் 19 ஆந் திகதி மற்றும் 2007 ஆகஸ்ட் 31 ஆந் திகதி அக்மீமனை பிரதேச செயலாளருக்கு செலுத்தப்பட்டிருந்தும் 1998 நவம்பர் 06 ஆந் திகதி அக்மீமனை பிரதேச செயலாளர் பொறுப்பேற்ற காணி அதிகாரசபையினால் 2006 மே 28 ஆந் திகதியே பொறுப்பேற்கப்பட்டிருந்தன. மேலும் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்திச் செயற்திட்டங்கள் எதுவும் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) 999/9 ஆம் இலக்க வர்ததமானி அறிவித்தலின் பிரகாரம் பொறுப்பேற்கப்பட்ட காணிகளின் அளவு 24 ஏக்கர் 01 ரூட் 01 பேச்சஸ் ஆக இருந்த போதிலும் காலி மாவட்ட பணிப்பாளரின் 2002 திசெம்பர் 04 ஆந் திகதிய மற்றும் அக்மீமனை பிரதேச செயலாளரின் 2002 திசெம்பர் 16 ஆந் திகதிய கடிதங்களின் பிரகாரம் காணிகளை மதிப்பீடு செய்வதற்கு 19 ஏக்கர் 02 ரூட் 14 பேச்சர்ஸ்களே கோரப்பட்டிருந்ததனால் பொறுப்பேற்கப்பட்ட

காணிகளின் அளவு தொடர்பாகவும் மதிப்பீடு செய்யப்பட்டதற்கும் இடையே வேறுபாடு உள்ளமை அவதானிக்கப்பட்டது.

(iii) காலி மாவட்ட பணிப்பாளர் 2002 திசெம்பர் 04 ஆந் திகதி, காணிகளின் பெறுமதியினை மதிப்பீடு செய்து தருமாறு அக்மீமனை பிரதேச செயலாளருக்கு தெரியப்படுத்தியிருந்ததுடன் அதன் பிரகாரம் பிரதேச செயலாளர் 2002 திசெம்பர் 16 ஆந் திகதி காணிகளின் முன்னேற்றகரமானதும் முன்னேற்றமில்லாததுமான பெறுமதியினைக் கோரியிருந்தார். அதன் பிரகாரம் பிரதம மதிப்பீட்டாளர் 2003 யூன் 16 ஆந் திகதிய கடிதத்தில் ரூபா 2,800,000 தொகையாகவும் 1997 நவம்பர் 13 ஆந் திகதிய கடிதத்தில் ரூபா 3,000,000 தொகையாகவும் 2006 ஆகஸ்ட் 02 மற்றும் 2002 நவம்பர் 06 ஆந் திகதிய கடிதங்களின் மூலம் 20 காணித் துண்டுகளின் பெறுமதியினை ரூபா 10,567,800 ஆகவும் மதிப்பீடு செய்திருந்தார். இதற்கிணங்க இழப்பீடு செலுத்துகின்ற நடைமுறையில் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களின் வழமைக்கு மாறான தாமதத்தின் காரணமாக ரூபா 3 மில்லியன் தொகையான செலவுகளுக்காக ரூபா 10.5 மில்லியன் செலவினை மேற்கொள்ளவேண்டி ஏற்பட்டது.

(iv) அக்மீமனை பிரதேச செயலாளரின் 2011 மார்ச் 31 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட இழப்பீட்டுத்தொகையில் 48 உரிமையாளர்களுக்கு 2001 மார்ச் 31 ஆந் திகதி ரூபா 6,940,275 செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 3,649,530 பணம் செலுத்தப்படாது மிகுதியாக இருந்தது.

(v) அதிகாரசபை மூன்று அத்துமீறிக் குடியிருப்பவர்களை வெளியேற்றுவது தொடர்பாக ரூபா 300,000 இழப்பீட்டுத் தொகையினைச் செலுத்தியிருந்த அதேவேளை 2011 மார்ச் 23 ஆந் திகதி வரையும் 04 அத்துமீறிக் குடியிருப்பாளர்கள் வசித்து வந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் காணியினைச் சுற்றி மதில்சுவர் அல்லது எல்லைகளைக் குறிப்பிடுதல் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக காணிகளின் தெளிவான

உரிமையாண்மைக்கு இடையூறு ஏற்படலாம் என்பது அவதானிக்கப்பட்டது.

**2.3.6 நில்வள கங்கை செயற்திட்டத்தின் இரும்பு படகு**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாத்தறை மாவட்டத்தில் நில்வள கங்கையின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்ற வெளிநாட்டு கம்பனிக்குரிய செயற்திட்டம் கைவிட்டுச் சென்ற இரும்பு படகு ஒன்றினை திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு தனியார் நிறுவனம் ஒன்றிற்கு 2007 சனவரி 31 ஆந் திகதி வருடாந்த குத்தகை அடிப்படையில் 10 ஆண்டுகளுக்கு ரூபா 57,448 தொகைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) குத்தகைக்குப் பெற்றவரின் செலவில் திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளும் இணக்கப்பாடு உருவாகியிருந்த இரும்புப் படகினை உடன்படிக்கையாளர் எடுத்துச் செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது நீர்ப்பாசனத் திணைக்களம் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்திருந்தது. இது தொடர்பாக அதிகாரசபையினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் சட்டமா அதிபதி திணைக்களத்தின் சிபர்சின் பேரில் பொறுப்பேற்றல், முதலீட்டாளருக்கு ஒப்படைத்தல் என்பன தவறானது என்பது உறுதிப்படுத்தப்பட்டிருந்தன. எனினும் இரும்பு படகினை எடுத்துச் செல்ல முடியாமையின் அடிப்படையில் ஏற்பட்ட நட்டமாக ரூபா 158 மில்லியன் இழப்பீடு ஒன்றினை அதிகாரசபையிடம் கோரி உடன்படிக்கையாளர் 2011 பெப்ரவரி 23 ஆந் திகதி ஆணைப்பத்திரம் ஒன்றினை அனுப்பியுள்ளார்.

**2.3.7 பிரியமான மீன்களை உருவாக்குதல் செயற்திட்டம்**

---

(அ) காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் 2000/2001 முதலீட்டுத் திட்டத்தின் பிரகாரம் கவர்ச்சிகரமான மீன்களை வளர்க்கும் அங்கத்தவர்களுக்கு கடன் தொகையாக ஒரு பிரிவிற்கு ரூபா 150,000 வழங்கி இரண்டு ஆண்டுகளின் பின்னர் வழங்கப்பட்ட கடன் தொகையில் 1/3 பங்கினை நன்கொடையாக விடுவிப்பதற்கும் இலக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) இந்த செயற்திட்டத்தின் கீழ் காலி மாவட்டத்தில் 15 மீன் வளர்ப்பாளர்களுக்கு ரூபா 1,489,958 தொகைக்கும் மாத்தறை மாவட்டத்தில் 13 மீன் வளர்ப்பாளர்களுக்கு ரூபா 950,000 தொகைக்கும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மீன் வளர்ப்பாளர்களுக்கு ரூபா 1,500,000 தொகைக்கும் ரூபா 3.95 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் கடனைப் பெற்றுக்கொண்ட கூட்டுறவுச் சங்கம் செயற்பாடற்று இருந்ததன் காரணமாக வழங்கப்பட்ட கடன் தொகையினை மீள அறவிட்டுக் கொள்ளவும் முடியாதிருந்தது.

(இ) இச் செயற்திட்டத்தின் கீழ் கவர்ச்சிகரமான மீன்களை வளர்ப்பதற்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன் வழங்குவதற்கு அதிகாரசபையின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இக்கடன் தொகையினை மானியமாகக் கருதி நடவடிக்கை எடுக்காமைக்கு 2011/2 ஆம் இலக்க 2011 மார்ச் 01 ஆந் திகதிய பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. 2000/2011 காலப்பகுதியில் நடவடிக்கைகளை மேற்கொண்ட பிரிவு முகாமையாளர் (கடற்றொழில்), பணிப்பாளர் (நிதியும் நிர்வாகமும்) ஆகிய உத்தியோகத்தர்களின் பொருத்தமற்ற காசு முகாமைத்துவம் மற்றும் பயன்பாட்டின் காரணமாக இடம்பெற்ற ஒழுங்கீனத்திற்கு முறைப்படியான பரிசோதனையினை நடாத்துவதற்கு பொலிஸ் விசேட குற்றப்புலனாய்வுப் பிரிவின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தும் அது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.3.8** (அ) மீளாய்வாண்டின் போது ஜாதிக சவிய கமநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, மொனறாகலை ஆகிய 4 மாவட்டங்களுக்காக 833 செயற்திட்டங்கள் தொடர்பாக ரூபா 234,971,818 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் 460 செயற்திட்டங்களைப் பூர்த்திசெய்வது தொடர்பாக ரூபா 157,494,331 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. 350 செயற்திட்டங்களுக்குரிய நிதி ஏற்பாடாகிய ரூபா 77,477,487 தொகை செலவு செய்யப்படாது சேமிக்கப்பட்டிருந்தது. சேமிப்பின் சதவீதம் 32.9% ஆக இருந்தது.

| மாவட்டம் | நிதிசார் செயல்முன்னேற்றம் | | | | | பௌதீக செயல்முன்னேற்றம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை | சமூக பங்களிப்பு | செலவு செய்யப்பட்ட தொகை | சேமிப்பு | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் செலவு செய்யப்பட்ட சதவீதம் | இலக்கிடப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை | பூர்த்திசெய்யப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை | பூர்த்திசெய்யப்படாத செயற்திட்டங்களின் எண்ணிக்கை | பௌதீக செயல்முன்னேற்றத்தின் சதவீதம் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | % | | | | % |
| காலி | 54,632,014 | 45,370,939 | 9,261,074 | 26,627,237 | 18,743,702 | 58.68 | 156 | 103 | 53 | 66.0 |
| மாத்தறை | 59,091,649 | 50,626,348 | 8,465,301 | 31,591,994 | 19,034,554 | 62.40 | 168 | 69 | 99 | 41.0 |
| அம்பாந்தோட்டை | 46,151,658 | 39,493,382 | 6,658,277 | 28,057,647 | 11,435,735 | 71.0 | 172 | 100 | 72 | 58.1 |
| மொனறாகல | 30,061,205 | 25,697,500 | 4,363,705 | 13,234,581 | 12,462,919 | 51.5 | 165 | 87 | 78 | 52.7 |
| தேரி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | | | | | | | | | | |
| காலி | 21,984,856 | 18,328,761 | 3,656,096 | 15,680,772 | 2,647,989 | 85.5 | 40 | 38 | 02 | 95.0 |
| மாத்தறை | 28,078,665 | 23,398,888 | 4,679,778 | 18,168,648 | 5,230,240 | 77.6 | 52 | 40 | 10 | 76.9 |
| அம்பாந்தோட்டை | 20,880,000 | 17,400,000 | 3,480,000 | 13,747,498 | 3,652,502 | 79.0 | 34 | 00 | 34 | 00.0 |
| மொனறாகலை | 15,000,000 | 12,500,000 | 2,500,000 | 10,218,343 | 2,281,657 | 81.7 | 25 | 23 | 02 | 92.0 |
| வரிசை நிறுவனங்களினால் ஒருங்கிணைப்புச் செய்கின்ற செயற்திட்டங்கள் | 33,748,000 | 2,156,000 | 1,078,000 | 167,611 | 1,988,389 | 7.7 | 21 | 00 | -- | 00.0 |
| | | 234,971,818 | | 157,494,331 | 77,477,487 | | 833 | 460 | 350 | |

| (ஆ) | நிகழ்ச்சித்திட்டம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை | செலவு செய்யப்பட்ட தொகை | வேறுபாடு |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| | உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி | 159,722,019 | 90,760,117 | 68,961,902 |
| | பொருளாதார மற்றும் சுய வேலைவாய்ப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 4,093,977 | 3,235,060 | 858,917 |
| | ஆத்மீக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 4,421,960 | 2,695,060 | 1,726,900 |
| | தேசத்தின் மகுடம் கண்காட்சி | 668,200 | 287,480 | 380,720 |
| | தலைமை அலுவலகக் கட்டிடத்தினை நிர்மாணித்தல் | 36,500,000 | 40,016,354 | (3,516,354) |
| | மூலதனச் சொத்துக்களைச் சுவீகரித்தல் | 3,000,000 | 1,121,474 | 1,878,526 |
| | உள்ளக ஊழியர் பயிற்சி | 500,000 | 427,209 | 72,791 |
| | நிர்வாகச் செலவுகள் 2% | 4,359,983 | 2,350,657 | 2,009,326 |
| | | 213,266,139 | 140,893,411 | 72,372,728 |

இது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

(i) அதிகாரசபையின் கூட்டிணைந்த திட்டத்திற்குரிய எந்த ஒரு செயற்திட்டமும் மீளாய்வாண்டின் போது அமுல்ப்படுத்தப்படாதிருந்ததுடன் ரூபா 120,201,203 தொகையான செயற்பாட்டுச் செலவுகளும் அதிகாரசபையின் பதவியணியினர், அதன் வளங்கள் முதலியன அதிகாரசபையின் குறிக்கோள்களுக்குப் புறம்பாக

ஜாதிக சவிய கமநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்திட்டங்களை அமுல்ப்பத்துவதற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

(ii) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 2010 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்குகள் 105-2-1-3 செலவுத் தலைப்பின் கீழ் அதிகார சபைக்கு மீண்டுவரும் வருமாணங்களாக ரூபா 106 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 105.6 மில்லியன் மீள்நிரப்பல் செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் ஊழியர் சம்பளங்களாக ரூபா 85,300,000 தொகை வரவு செலவுத்திட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 80,427,000 மாத்திரம் மீள்நிரப்பல் செய்யப்பட்டிருந்தது. எனினும் உள்ளபடியான செலவு ரூபா 83,786,508 ஆக இருந்ததனால் ரூபா 3,359,508 தொகையான வேறுபாடு அதிகார சபைக்கு மேலதிக செலவாகக் காணப்பட்டது.

(iii) மீளாய்வாண்டின் இறுதியில் இறுதி நிதிக்கூற்றுக்களில் சுட்டிக்காட்டப்பட்ட நடைமுறை வேலைகளின் பெறுமதியில் 2000 ஆம் ஆண்டிலிருந்து 2007 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதிக்குரிய ரூபா 2,424,175 பெறுமதியான 07 செயற்திட்டங்களின் வேலை பூர்த்தி செய்யப்படாது முன்கொண்டு வரப்பட்டுக்காணப்பட்டன.

## 2.4 வாகனப் பயன்பாடு

மீளாய்வாண்டில் 12 கார்கள் 19 கெப் வாகனங்கள் 04 பவுசர்கள், 07 லொறிகள், 02 வேன்கள் என்பன அதிகாரசபையின் போக்குவரத்து குழாமிற்குச் சொந்தமாக இருந்தன. இந்த டீசல் மற்றும் பெற்றோல் வாகன பயன்பாடு தொடர்பான முக்கியமான தரவுகளின் பகுப்பாய்வு ஒன்று கடந்த ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்படுகின்றன.

| **விபரம்** | | **பெற்றோல்** | | **டீசல்** | |
|---|---|---|---|---|---|
| | | **2010** | **2009** | **2010** | **2009** |
| எரிபொருள் செலவு | ரூபா | 254,522 | 363,480 | 1,794,982 | 2,946,695 |
| பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவு | ரூபா | 295,560 | 368,234 | 3,629,696 | 3,716,153 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சாரதியின் சம்பளம் பட்டா மேலதிக நேர வேலை என்பன | ரூபா | 488,293 | 245,630 | 4,165,641 | 4,526,290 |
| | | --------------- | -------------- | --------------- | -------------- |
| மொத்தக் கிரயம் | | 1,038,375 | 977,344 | 9,590,319 | 11,189,138 |
| செயற்பட்டுள்ள மொத்த தூரம் - கிலோ மீற்றர் | | 61,762* | 52,391 | 507,160 | 533,424 |
| நுகரப்பட்ட எரிபொருளின் அளவு லீற்றர்கள் | | 1,647 | 2,913 | 27,911 | 36,752 |
| ஒரு லீற்றர் எரிபொருளுக்கு செயற்பட்டுள்ள சராசரி தூரம் கிலோ மீற்றர் | | 37.49 | 17.98 | 18.17 | 14.51 |
| ஒரு கிலோமீற்றருக்கு எரிபொருளுக்கான சராசரிச் செலவு | ரூபா | 4.12 | 6.93 | 3.53 | 5.52 |
| ஒரு கிலோமீற்றருக்கு பழுதுபார்த்தல் மற்றும் மேற்பார்வை சராசரிச் செலவு | ரூபா | 4.78 | 7.02 | 7.15 | 6.96 |
| ஒரு கிலோமீற்றருக்கு சாரதியின் ஊதிபங்களுக்கான சராசரிச் செலவு | ரூபா | 7.90 | 4.68 | 8.21 | 8.48 |
| ஒரு கிலோமீற்றருக்கான ஒட்டு மொத்த சராசரிச் செலவு | ரூபா | 16.81 | 18.65 | 18.90 | 20.97 |

* வெளிநிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த வாகனங்கள் செயற்பட்டிருந்த கிலோ மீற்றர் அளவு இதில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) அதிகாரசபையின் வளங்களை ஏனைய தனியார் மற்றும் அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்குதல்

---

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிரூபத்தின் 8.3.9 ஆம் பிரிவிற்கு மாறாக அதிகாரசபைக்குச் சொந்தமான வாகனங்கள் வரிசை அமைச்சு மற்றும் வெளி நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

| **வாகன இலக்கம்** | **வாகனத்தின் வகை** | **விடுவிக்கப்பட்ட திகதி** | **வாகனத்தினைப் பயன்படுத்துகின்ற நிறுவனம்/நபரின் பெயர்** |
|---|---|---|---|
| 59 – 0466 | டொயடா டபிள் கெப் | 2007.03.09 | மாவட்டஇணைப்பாளர் |
| 300 – 0546 | நிசான் டபள் கெப் | 2006.05.05 | ஆலோசகர் |
| 57 – 5713 | டபள் கெப் | 2007.04.07 | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு |
| 65 – 0964 | ஜீப் | 2002.03.04 | - மேற்படி - |
| 65 – 1950 | ஜீப் | 2003.06.21 | - மேற்படி - |
| 65 – 0838 | ஜீப் | 2008.08.17 | பணிப்பாளர் சபை அங்கத்தவர் |
| 59 – 0315 | டபள் கெப் | | கௌரவ பிரதி அமைச்சின் கடைமைக்காக. |

(ஆ) அதிகாரசபையின் வாகனங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்

---

அதிகாரசபைக்குச் சொந்தமான ரூபா 12,000,000 பெறுமதியான மோட்டார் வாகனம் ஒன்று 2007 மார்ச் 09 ஆந் திகதியிலிருந்து உத்தியோகத்தர் ஒருவருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந்த உத்தியோகத்தர் தென் மாகாணசபைத் தேர்தலுக்கு வேட்பாளராக போட்டியிட்டதன் காரணமாக 2009 ஆகஸ்ட் 28 ஆந் திகதியிலிருந்து சேவையிலிருந்து நீங்கி இருந்ததுடன் 2011 பெப்ரவரி 18 ஆந் திகதியன்றும் வாகனம் மீள ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

இந்த வாகனத்திற்கு 2009 செப்தெம்பரிலிருந்து 2011 பெப்ரவரி வரையான காலப்பகுதியில் அதிகாரசபையின் நிதியிலிருந்து சேவைசெய்தல்,

பழுதுபார்த்தல், காப்புறுதி செய்தல், வாகன உத்தரவுப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ளல் என்பன தொடர்பாக ரூபா 450,725 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது.

## 2.5 கட்டுநிதி கணக்குகளின் மீதி

-----------------------------------------------

2002 ஆம் ஆண்டிலிருந்து பெறவேண்டிய மீதியில் காட்டப்பட்ட தற்பொழுது செயற்பாடற்ற நிலையிலுள்ள நான்கு நிறுவனங்களிடமிருந்து ரூபா 108,173 தொகை அறவிடப்படவேண்டியிருந்தது. இந்த பணத்தினை அந்த அந்த சந்தர்ப்பங்களில் அறவீடு செய்யவதற்கு உரிய பிரிவு முகாமையாளர்களின் கவனயீனத்தின் காரணமாக அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

## 2.6 கூட்டினைந்த திட்டம்

---------------------------------

(அ) அதிகாரசபை தனது நடவடிக்கைகளைக் மேற்கொள்வதற்காக 2008 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, மொனறாகலை ஆகிய மாவட்டங்களிலுள்ள கொலன்ன, எம்பிலிபிட்டி பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தின் எட்டுப் பிரிவுகளின் கீழ் ரூபா 2,127.74 மில்லியன் தொகையினை செலவு செய்வதற்கு கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக கூட்டினைந்த திட்டத்திற்குப் புறம்பான ஜாதிக சவிய கமநெகும ஆகிய நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நிறுவனத்தின் பிரதான குறிக்கோள்களில் உள்ளடக்கப்பட்ட பின்வரும் செயற்பாடுகள் அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் அதற்குரிய திட்டங்களைத் தயாரிப்பதற்கு மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் எது வித முயற்சிகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(i) உற்பத்தித் திறனை உயர்த்துதல், பொருளாதார அபிவிருத்தியினை மேம்படுத்துதல் வருமானம் மற்றும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல் என்பவற்றிக்காக

ஆரம்பிக்கப்படுகின்ற அபிவிருத்திச் செயற்திட்டங்களை பெயர் குறிப்பிட்ட பிரதேசங்களில் திட்டமிட்டு அமுல்ப்படுத்துதல்

(ii) பெயர் குறிப்பிடப்பட்ட பிரதேசங்களில் ஒட்டுமொத்த அபிவிருத்தி திட்டங்களில் இனங்காணப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பாக முன்னுரிமை அடிப்படையில் விபரமாக ஆய்வு செய்தல்

(iii) ஏதும் நிரந்தர செயற்திட்டங்கள் அல்லது நிகழ்ச்சித்திட்டங்களுக்காக வெளிநாட்டு நிதிகளை வழங்குவதற்கு உரிய அமைச்சர்களின் அமைச்சுக்களை வேண்டுதல்

(iv) (ii) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஆய்வுகளை மேற்கொள்ளல், பெயர் குறிப்பிடப்பட்ட பிரதேசங்களில் அபிவிருத்திச் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் என்பவற்றிகாக அரசாங்க திணைக்களங்கள், அரசாங்க நிறுவனங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசாங்க அல்லது தனிப்பட்ட நபர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளல்.

(v) (ii) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஆய்வுகளை மேற்கொள்ளல், பெயர் குறிப்பிடப்பட்ட பிரதேசங்களில் அபிவிருத்திச் செயற்திட்டங்களை அமுல்படுத்தல் என்பவற்றிற்காக வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு தனிப்பட்ட பிரிவுகளிலுள்ள முகவர் நிறுவனங்களின் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ளல்

## 2.7 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

2010 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த செயல்நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தும் அதில் கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

செயற்திட்டங்களை நிர்ணயிக்கும் போது அதகாரசபையின் அனைத்து பிரிவுகளும் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. நிறுவனத்தின் குறிக்கோள்களுக்கு புறம்பாக செயல் நடவடிக்கைத்திட்டம்

தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த இலக்குகள் அடைந்து கொள்ளப்படாத சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

## 2.8 பாதீடு

பாதீடு செய்யப்பட்டவைகளுக்கும் உள்ளபடியானவைகளுக்குமிடையே குறிப்பிடத்தக்க அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடு செயற்திறனான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டன. அதிகாரசபை விசேட கவனம் செலுத்தப்பட வேண்டிய முறைமைகள் மற்றம் கட்டுப்பாட்டு அம்சங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) நிலையான சொத்துக்கள்

(ஆ) கொள்வனவு

(இ) கணக்கீடு

(ஈ) கடன்தொகை மற்றும் வருமானங்களைச் சேகரித்தல்

(உ) பழைய கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதி

(ஊ) ஒப்பந்த வேலைகள்

(எ) செயற்திட்டங்களை அமுல்ப்படுத்தல்

(ஏ) ஆளணி முகாமைத்துவம்